பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 130

சனிக்கிழமை
05 ஏப்ரல் 2025

பங்குனி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056


## புத்தாண்டில் 'குடி'மக்களுக்கு வாய்ப்பூட்டு!

கொழும்பு, ஏப். 5
சிங்கள - தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு, எதிர்வரும் 13 மற்றும் 14ஆம் திகதிகளில் மதுபான விற்

11

## பிரதிப் பொலிஸ்மா அதிபராக ஷானி அபேசேகர?

கொழும்பு, ஏப். 5
சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகரவை, பிரதிப் பொலிஸ்மா அதிபர் பத

11

## ஏழு பொருள்கள் விலைக்குறைப்பு!

கொழும்பு, ஏப். 5
பண்டிகைக்காலத்தை முன்னிட்டு சதொசவில் ஏழு அத்தியாவசியப் பொருள்

11

# வந்தார் மோடி!



கொழும்பு, ஏப்ரல் 5

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, நேற்று இரவு 8.30 மணியளவில் இலங்கைக்கு வருகைதந்தார். வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் பிரதமர் மோடியை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு நேரில் சென்று வரவேற்றனர்.

11

## முறைப்பாடு 527!

கொழும்பு, ஏப். 5
உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் இதுவரை, 527 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. முன்வைக்கப்பட்டுள்ள 527 தேர்தல் முறைப்பாடுகளில் 4 முறைப்பாடுகள் தேர்தல் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவை. (அ-ம-இ)

## ஹெரோய்னுடன் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 5
யாழ்ப்பாணத்தில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
யாழ்ப்பாண மாவட்ட

11

### உள்ளூராட்சித் தேர்தல்
## வடக்கில் நிராகரிக்கப்பட்ட மனுக்கள் தள்ளுபடி!

கொழும்பு, ஏப்ரல் 5
உள்ளூராட்சித் தேர்தலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுநிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பில், உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டவழக்குகள் அனைத்தும் நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டுள்

11

## மோடியின் வருகை; 11 மீனவர்கள் விடுவிப்பு!

### நல்லெண்ணம் காட்டியது கொழும்பு

யாழ்ப்பாணம், ஏப். 5
இந்தியப் பிரதமர் மோடியின் வருகையை முன்னிட்டு, இந்திய மீனவர்கள் 11பேர் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த

11




'மோடி இஞ்ச வரமுதலே இவையள் உப்பிடி பரிசுகளைக் குடுத்து நல்லா ஐஸ் வைக்கினம் பாருங்கோ'

## செம்மணி அகழ்வாய்வு நிதி விடுவிப்பு இழுபறி

### நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 5
யாழ்ப்பாணம் செம்மணி சிந்துபாத்தி மயானத்தில், மனித என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியில் மேலதிக அகழ்வாய்வை மேற்கொள்வதற்கு நிதி விடுவிக்கப்படுவதில் தொடர்ந்தும் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்காக

11

## அரச கடமைக்கு இடையூறு; இருவர் சிறையில் அடைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5
யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், அரச கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் இரு

11

## ஜூன் மாதம் கப்ராலிடம் விசாரணை

கொழும்பு, ஏப். 5
2012ஆம் ஆண்டு கிரேக்க நாட்டுப்

11

## தனியார் காணிக்குள் அத்துமீறி மரங்களை வெட்டிய இராணுவம்

### நவாலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 5
யாழ்ப்பாணம் நவாலி பகுதியில் உள்ள தனியார் காணிக்குள் அத்துமீறி நுழைந்த இராணுவத்


11


LB FINANCE

லீசிங்

சித்திரை குதூகலம்
APRIL YARL FIESTA

வடக்கு சைக்கிள் பந்தயம்
யாழ்ப்பாணம் 2025
ஏப்ரல் 5ம் திகதி



LB FINANCE





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 04.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4038 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 23 30 51 60 |
| விசே எழுத்து | Z |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 04.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1105 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 36 43 60 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 04.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0064 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 1 4 2 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 04.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2144 |
| ஆங்கில எழுத்து | U |
| சுப்பர் இலக்கம் | 26 |
| வெற்றி இலக்கங்கள் | 14 29 38 48 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 04.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5796 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 8 6 5 0 5 2 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 04.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1826 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 07 34 35 68 |
| விசேட எழுத்து | Y |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 04.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0371 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 5 0 5 2 |

# பொருளாதாரம் சரிந்தால் இனியும் நாடு தாங்காது

## மனோகணேசன் எம்.பி. தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்.5**

**மீண்டுமொரு பொருளாதார வீழ்ச்சி யுகத்தை எம் நாடு தாங்காது. புதிய வரி விதிப்பின் பாரதூரத்தை ஜனாதிபதி அநுரகுமார உணர வேண்டும் என்று தமிழர் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் ஏற்றுமதியில் அதிக பங்கான 25 சதவீதத்தை இறக்குமதி செய்யும் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் புதிய வரிவிதிப்பு இலங்கைக்குப் பெரும் தாக்கத்தைச் செலுத்தும்.

தொழிற்றுறை முடங்கி, வர்த்தகம் வீழ்ச்சி அடைந்து, பணப்புழக்கம் குறையவிடக்கூடாது.

மிகச்சரியான சந்தர்ப்பத்தில் இலங்கை வரும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் கரங்களை நாம் இறுகப்பற்றி, வளர்ச்சி அடையும் உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடான இந்தியாவுடன் சேர்ந்து கரை யேறவேண்டும். ஆகவே இது பழைய அரசியல் செய்யும் நேரமில்லை.

நிலைமையின் பாரதூரத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாக்க உணரவேண்டும். இந்தியா, சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற உலகின் முன்னேறி வரும் பொருளாதார சக்திகளுடன் பரஸ்பர வர்த்தக ஒப்பந்தங்கள் செய்ய முன்வரவேண்டும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 04.04.2025 | வெள்ளிக்கிழமை | 0504 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| K | 7 2 9 3 9 1 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | 04.04.2025 | தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 2770 | P | 25 65 68 76 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | 04.04.2025 | |
| தினம் | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| A | 17 39 62 74 | 4931 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | 04.04.2025 | |
| தினம் | வெள்ளிக்கிழமை | |
| | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| தனுசு | 23 29 51 55 | 4482 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | 04.04.2025 | தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| L | 22 | 41 56 66 75 | 1946 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | 04.04.2025 | |
| தினம் | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| I | 02 26 37 42 | 2596 |

# கச்சதீவு இலங்கையின் சொத்து

## சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 5

கச்சதீவு இலங்கைக்கே சொந்தமான தீவாகும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி உறுப்பினரான முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர இடித்துரைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கச்சதீவு தமக்கு வேண்டுமென தமிழக அரசாங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இருந்தே கச்சதீவு எமது கடற்பரப்புக்குள்ளேயே உள்ளது. இது தொடர்பான வரைபடங்களும் உள்ளன.

அதேபோல தமிழ் நாட்டுக்கும், வடக்குக்கும் இடையில் கப்பல் சேவை உள்ளது. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் அலுவலகமொன்றை யாழ்ப்பாணத்தில் திறக்கமுற்படுகின்றனர். இந்தப் பின்புலத்திலேயே இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பில் எமக்கு சந்தேகம் எழுந்துள்ளது. ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளைத் தெரியப்படுத்தினால் தான் அந்த சந்தேகம் தீரும் என்றார். (ச-44)

# மீனவர் பிரச்சினையை மோடி ஆராயவேண்டும்

## டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.5

இலங்கைக்கு வருகைதரும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் வடக்கு கடற்றொழிலாளர்களின் விவகாரம் குறித்துப் பேசுவது மிகவும் முக்கியமானது என்று முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கையின் பிரதான பிரச்சினைகளில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் காணப்படுகின்றது. இதனால் வடக்கு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

கச்சதீவு சட்டநீதியாக இலங்கைக்கு வழங்கப்பட்டதொன்றாகும். எனினும் கச்சதீவை வழங்கினாலும் எல்லைதாண்டும் மீனவர்கள் பிரச்சினை தீராது. எனவே கட்டாயமாக இதுதொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியிடம் பேசவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-27, 20)

# சீனா தக்க பதிலடி

பீஜிங், ஏப். 6

அமெரிக்காவால் சீனாவுக்கு எதிராக 34 வீத வரிகள் விதிக்கப்பட்டிருந்த நிலையில், சீனாவும் அமெரிக்காவுக்கு எதிராக 34 வீத வரி விதித்துப் பதிலடி கொடுத்துள்ளது. (ம)

# அமெ. வரியிலிருந்து மீள ஒத்துழைப்பு வழங்குவோம்!

## பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 5

அமெரிக்காவின் வரிவிதிப்பால் ஏற்படப்போகும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்குரிய அனைத்து வேலைத்திட்டங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படும் எனப் பொதுஜன பெரமுனக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு அமெரிக்க 44 சதவீத வரியை விதித்துள்ளது. இதனால் பொருளாதாரப் பிரச்சினை நுழைவாயிலில் நாம் இருக்கின்றோம்.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டின் பக்கமே நிற்போம். குறுகிய அரசியல் நோக்கில் செயற்படத்தயாரில்லை.

கொரோனா நெருக்கடியின்போதும் இப்படியான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அவ்வேளையில் ஜே.வி.பி. உள்ளிட்ட எதிரணிகள், நாட்டை மூடுமாறு வலியுறுத்தின. நாட்டை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கும்வகையில் செயற்பட்டு, நாட்டு பொருளாதாரத்தை நாசமாக்கின. எனினும், நாட்டை நேசிக்கும் கட்சி என்ற வகையில் நாம் அவ்வாறு செயற்படபோவதில்லை. நெருக்கடியில் இருந்து மீள்வதற்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவோம் - என்றார். (ச-44)

# ஊழலுக்கு இடமில்லை

## பரப்புரையில் ஜனாதிபதி

கொழும்பு, ஏப். 5

ஊழல் உத்தியோகத்தர்களைப் பதவியை விட்டு விலகி வீடு செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இனிமேல் இந்த நாட்டில் ஊழலுக்கு இடமில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் இடம்பெற்ற பொதுமக்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முதல்முறையாக ஊழல் மோசடிகளற்ற புதிய அரசாங்கம் பதவியில் அமர்ந்துள்ளது. குடிவரவு,குடியகல்வுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மூன்று பேர் விரைவில் பதவிவிலகவுள்ளனர். முன்பு ஓர் அரசாங்க வேலையைப் பெற்றுக்கொள்வதற்குக்கூட இலஞ்சம் கொடுக்க வேண்டியிருந்தது. இனிமேல் இந்தச் செயற்பாட்டுக்கு இடமளிக்கப்படாது - என்றார். (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலுகை விலையில் பொதி; தேர்தல் ஆணைக்குழு தடை

கொழும்பு, ஏப். 5

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தமிழ்,சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு சலுகை விலையில் உணவுப்பொதிகளை வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதில் சிக்கல் இருப்பதாகத் தெரிவித்து தேர்தல் ஆணைக்குழு தற்காலிகத் தடைவிதித்துள்ளது.

தேர்தல் நடைபெற்றுமுடியும் வரை சலுகை விலையில் உணவுப்பொதிகளை வழங்கும் வேலைத்திட்டத்தை ஒத்திவைக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர், வர்த்தகம், வணிகம், உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தித்திணைக்களத்தின் செயலாளருக்கு தேர்தல் ஆணைக்குழு எழுத்துபூர்வமாக அறிவித்துள்ளது. தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் மற்றும் உணவுப்பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில் இந்தத் திட்டம் இம்மாதம் முதலாம் திகதி முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)




வெள்ளைவேட்டிக் கள்ளர் எண்டு கேள்விப்பட்டிருப்பியள், ஆனால் இப்ப வெள்ளைச் சேட்டு கள்ளர் எண்டு புதுசா கொஞ்சப் பேர் வெளிக்கிட்டிருக்கினம். ஆக்களைப் பார்த்தால் பெரிய ஒபீஸர் மாதிரி ரிப்ரொப்பா வெளிக்கிட்டு, ரை கட்டி, சப்பாத்துப் போட்டு காரிலதான் வந்திறங்குவினம். அதைப் பார்த்து ஏமாந்தமெண்டால் இருக்கிறதையெல்லாம் சுருட்டிக்கொண்டுபோடுவினம். அப்பிடித்தான் ஒரு வெள்ளைச் சேர்ட் கும்பல் யாழ்ப்பாணத்தில இருக்கிற ரெலிபோன் ரவர்களில ( தொலைத்தொடர்புக்கோபுரம்) இருக்கிற பற்றரியெல்லாத்தையும் பட்டப்பகலில எல்லாருக்கும் முன்னால எடுத்துக்கொண்டு போயிருக்கினம்.

இந்தக் கும்பலில இருக்கிற ஒருத்தர், ஏற்கனவே ஒரு ரெலிபோன் கொம்பனியில உந்த 'ரவர்களை' மேற்பார்வை செய்யிற வேலையில இருந்திருக்கிறார். பிறகு அந்த வேலையை விட்டிட்டார். எண்டாலும் உந்த ரெலிபோன் ரவர்களில எப்பிடிப் பாதுகாப்பு இருக்கெண்டதும், என்னெண்டு சொல்லிக்கொண்டுபோனால் ஆக்களுக்கு டவுட் வராதெண்டதும் அவருக்கு அத்துப்படி. அதைப் பாவிச்சு தன்னோட நாலைஞ்சு பேரை( அவைக்கும் ரை கட்டி) துணைக்கு கூட்டிக்கொண்டு, காரில ஒவ்வொரு ரவருக்கும் போவாராம். அந்த ரவரில இருக்கிற ஏதோ பிரச்சினையை திருத்திற மாதிரி 'சீரியஸா' எல்லா இடமும் பாப்பினமாம். சனநடமாட்டம் குறைஞ்சவுடன, ரவருக்கு கீழ இருக்கிற பற்றரியளில ஒண்டை தங்கட காருக்க வைச்சிடுவினம். சிலவேளை ஆக்கள் பற்றரியை காருக்குள்ள வைக்கேக்க கண்டால், ' பற்றியில தான் பழுது. திருத்திப்போட்டு கொண்டந்து பூட்டப்போறம்' எண்டு சொல்லிச் சமாளிப்பினமாம். இப்பிடி அவை ஒவ்வொரு ரவரா போய் பற்றரியளை ஆட்டையைப் போட்டாலும், அந்த ரவருக்குப் பொறுப்பான கெம்பனியளுக்கு உடன தெரியவராது. ஏனெண்டால் உந்த பற்றரியள் கரண்ட் கட்டாப் போற நேரத்திலதான் பாவிக்கிறவை. அதுவும் கனநேரம் கரண்ட் இல்லாட்டி தான் பற்றரி களவு போட்டுது எண்டு தெரியவரும். அதால கொம்பனியளும் கவனிக்காமல் விட, இவையளும் தங்கடபாட்டில பற்றரியளை எடுத்துக்கொண்டுபோய், மட்டக்களப்பில வித்திருக்கினம்.

190 பற்றரியளை இப்பிடி அவை தூக்கியிருக்கினமாம். ஒரு பற்றரியை ஒண்டரை லட்சம் ரூபாபடி வித்திருக்கினம். அப்பிடியெண்டால் கிட்டத்தட்ட 2 கோடி ரூபா அவை உழைச்சிறுகுதான். இப்பிடியொரு கும்பல் பற்றரியளை தூக்கிக்கொண்டு போற விசயமே தெரியவந்து, இப்ப அவையை பொலிஸ் பிடிச்சிருக்குது. சிலவேளை, கரண்ட் கட்டாகாமல் இருந்திருந்தால், அந்தக் கும்பல் யாழ்ப்பாணத்தில எல்லா ரவரிலையும் உள்ள பற்றரியளையும் கொண்டுபோயிருக்கும். இனிமேல் இப்பிடி ரிப்ரொப்பா வெளிக்கிட்டு வந்தாலும், கொஞ்சம் அவையிலையும் கண்வைக்கிறது நல்லது கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

தர்மபுரத்தில்

# கசிப்புக்கோட்டை முற்றுகை; தப்பித்தனர் சந்தேகநபர்கள்

கிளிநொச்சி, ஏப். 5

கிளிநொச்சி - தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில், நீண்டகாலமாகச் செயற்பட்டுவந்த கசிப்புக் காய்ச்சுமிடம் பொலிஸாரால் நேற்று முற்றுகையிடப்பட்டுள்ளது.


தர்மபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமையவே அந்தக் கசிப்புக் காய்ச்சுமிடம் முற்றுகையிடப்பட்டது. சம்பவ இடத்திலிருந்து 2 ஆயிரத்து 970 போத்தல் கோடாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். எனினும், சந்தேகநபர்களாக எவரும் கைது செய்யப்படவில்லை. (ம-113)

# தேர்தல் விதிமீறல் வவு.வில் 4 பதிவு

வவுனியா, ஏப். 5

வவுனியாவில் தேர்தல் விதிமுறைமீறல் தொடர்பில் இதுவரை 4 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று வவுனியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சி. அமல்ராஜ் தெரிவித்துள்ளார். வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 3 முறைப்பாடுகள் விசாரணை மேற்கொள்ளப்பட்டு முடிவுறுத்தப் பட்டுள்ளன. ஒரு முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. தேர்தல் வன்முறை தொடர்பில் எவையும் பதிவாகவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ச-18)



# பெண்ணாக நடித்து 17 பிக்குகளை ஏமாற்றியவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.5

பெண்ணாக நடித்து 17 பிக்குகளை ஏமாற்றி நிதிமோசடி செய்த இளைஞர் ஒருவரை குற்றப்புலனாய்வுத் திணைக்கள இணைய புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர் பெண் குரலில் பேசி ஆபாசப்படங்களைக் காட்டி அவர்களின் செயற்பாடுகளைக் காணொலி எடுத்து அவற்றை சமூகமயப்படுத்துவேன் எனப் பயமுறுத்தி பணம் பெற்றுவந்துள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)



# யாழ்ப்பாணத்தை தரிசித்துச் சென்ற பாய்மரப்படகுகள்

யாழ்ப்பாணம், ஏப்.5

சென்னையிலிருந்து 10 பேர் அடங்கிய 2 பாய்மரப்படகுகள் நேற்றுமுன்தினம் இரவு காங்கேசன்துறையை வந்தடைந்தநிலையில் நேற்றுக் காலை காங்கேசன்துறையில் இருந்து நாகபட்டினம் நோக்கிப் பயணத்தை ஆரம்பித்துள்ளன. 400 கிலோமீற்றர் தூரத்தை இலக்காகக்கொண்டு சென்னையிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தப் படகுப் பயணம் நாகப்பட்டினத்தை அடைந்து அங்கிருந்து காங்கேசன்துறையை வந்தடைந்தது.

இந்தநிலையில் மீண்டும் நாகப்பட்டினம் நோக்கிப் புறப்படுகின்ற இந்தப் படகு பூம்புகார், பாண்டிச்சேரி, கோவளம் சென்று இறுதியில் சென்னையைச் சென்றடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-125,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும்.

**இடபம்:** அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் சற்று இழுபறிக்குப் பிறகு சாதகமாக முடியும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்து கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும்.

**மிதுனம்:** மனம் உற்சாகத்துடன் காணப்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குக் குடும்பத்தினருடன் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேச்சில் பொறுமை அவசியம்.

**கடகம்:** எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன்வாங்கவும் நேரிடும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்பட்டாலும் சில சங்கடங்களும் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்கள் கேட்கும் உதவியைச் செய்து கொடுப்பீர்கள்.

**சிம்மம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். அரசாங்கக் காரியங்கள் தாமதமாகமுடியும். சிலருக்கு வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். சிலருக்கு வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளநேரிடும்.

**துலாம்:** வீண்செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்கவேண்டாம். கூடுமான வரை வீண் அலைச்சலைத் தவிர்த்து விடுவது நல்லது. வெளியிடங்களில் உணவு உண்பதைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்கக் கடன்வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. சிலருக்கு எதிர்பாராத பயணங்களுக்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** அரசாங்க அதிகாரிகளைச் சந்திக்கும்போது பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை யின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**மகரம்:** கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். குடும்பத்தில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சிலருக்கு வெளியூர்ப் பயணம் செல்லநேரிடும்.

**மீனம்:** உற்சாகமான நாளாக அமையும். ஆனால், புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். சிலருக்கு திடீர் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். சகோதரர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

# லக்னோவிடம் நேற்று வீழ்ந்தது மும்பை!



லக்னோ, ஏப். 5

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், லக்னோவிடம் போராடித்தோல்வியடைந்தது மும்பை இந்தியன்ஸ்.**

முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப வீரரான மிச்செல் மார்ஷ் அதிரடியாக விளையாடி 31 பந்துகளில் 60 ஓட்டங்களைப் பெற்றார். எய்டன் மார்க்ரம் 53 ஓட்டங்களையும், பதோனி 30 ஓட்டங்களையும், மில்லர் 27 ஓட்டங்களையும் பெற்று அணியைப் பலப்படுத்தினார்கள்.

பந்துவீச்சில் ஹார்திக் பாண்டியா 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய மும்பை அணிக்கு ஆரம்ப வீரர்களான வில் ஜக்ஸ் 5 ஓட்டங்களுடனும், ரிக்கில்ரன் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினார்கள். 20 ஓவர்களின் முடிவில் அந்த அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. சூரியக் குமார் யாதவ் 67 ஓட்டங்களையும், நமன் 46 ஓட்டங்களையும் பெற்றனர். 'தாக்கம் செலுத்தும் வீரராக' களமிறங்கிய திலக் வர்மா 25 ஓட்டங்களை 23 பந்துகளை எதிர்கொண்டு பெற்றார். கிட்டத்தட்ட 10 பந்துகளை அவர் வீணாக்கினார். திலக் வர்மாவின் ஆட்டமே மும்பையைச் சரிவுக்கும், தோல்விக்கும் காரணமாக அமைந்தது.

பந்துவீச்சில் டிவேஷ் 4 ஓவர்களை வீசி 21 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். (ம)







# முதலீட்டு வலயங்கள் ஊடாக வடக்கில் 16,000 தொழில்கள்

## முதலீட்டுச் சபையின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

அரசாங்கம் வடக்கில் முன்மொழிந்துள்ள மூன்று முதலீட்டு வலயங்கள் தொடர்பான நடவடிக்கைகளும் இந்த வருடத்தின் மூன்றாம் காலாண்டில் ஆரம்பிக்கப்படும். இதன்மூலம் வடக்கில் 16 ஆயிரம் பேருக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படும் என்று இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கை முதலீட்டுச் சபையினர் மற்றும் வடக்கின் அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய முதலீட்டு வலயத்துக்கான போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், கழிவு நீர் சுத்திகரிப்பு வசதிகள் தொடர்பாகவும் இதன்போது தனித்தனியாக விரிவாக ஆராயப்பட்டன. இதனை முன்னெடுப்பதிலுள்ள உடனடிச் சவால்கள் இனங்காணப்பட்டு அவற்றுக்குத் தீர்வுகளும் கண்டறியப்பட்டன.

(ம-26-66-110-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

நூலகத்தைவிட வேறெதுவும் ஒரு மனிதனை மரியாதைக்குரியவராக ஆக்குவதில்லை.

—வின்சென்ட் சேர்ச்சில்—


# வரிகளும் வலிகளும்!

இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் அனைத்துப் பொருள்களுக்கும் 44 வீதமான வரிகள் விதிக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். உலக நாடுகள் அனைத்தும், அமெரிக்க டொலரை எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்குச் சுரண்டுகின்றன என்று ட்ரம்ப் தொடர்ச்சியாக விமர்சித்துவந்தார். இதன் தொடர்ச்சியாக அவரால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பரஸ்பர வரிவிதிப்புக்கொள்கைக்கு அமையவே, இலங்கைக்கு 44 வீத வரிகள் விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வரிவிதிப்பால், ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரமும் கதிகலங்கியிருக்கின்றது. பங்குச்சந்தைகளில் கண்ணுக்கெட்டிய தூரம்வரை சிவப்புக் கோடுகளே மீதமிருக்கின்றன. இதன் விளைவாக, 'ட்ரம்பின் முடிவு உலக ஒழுங்கை வலிந்து மாற்றும் செயல்' என்று கடுமையாகக் கண்டித்துள்ளார் பிரான்ஸின் அதிபர் மக்ரோன். ஆனால், இந்த அனைத்து நாடுகளைவிடவும், ஒப்பீட்டளவில் மிகவும் அதிகளவான பாதிப்பை இலங்கையே எதிர்கொள்ளவிருக்கின்றது. இதில், இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. இலங்கையின் ஏற்றுமதிகளில் 25 வீதமானவை அமெரிக்கச் சந்தைகளுக்கே செல்கின்றன. இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத் தில் அமெரிக்காவின் பங்களிப்பு அதிகம் என்பதால், அதிபர் ட்ரம்பின் இந்த நடவடிக்கைகள் இலங்கைக்குப் பேரிடியே. அதிலும், நாணயநிதியத்தின் ஒப்பந்தங்களைத் தலையில் சுமந்தவாறு, பொருளாதார விடியலைநோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் நிலையில், அமெரிக்கா பிறப்பித்திருக்கும் வரி விதிப்பு உத்தரவு இந்தத் தீவின் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தையும் கொன்றுபுதைப்பதற்கு ஒப்பானது.

அமெரிக்காவின் வர்த்தகப்போரை எதிர்கொள்வதற்காக ஜனாதிபதி அநுரவால், சிறப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கையுடனான வர்த்தகப்போரை தணியச் செய்வதே அந்தக் குழுவின் நோக்கம். நிச்சயமாக இது நிறைவேறப் போவதில்லை. ஏனெனில், அமெரிக்காவுடன் நேரடி வர்த்தகக் கூட்டணியைக் கொண்டிருக்கும் கனடாவுக்கும் மெக்சிக்கோவுக்கும் 25 வீத வரி விதிப்பை ட்ரம்ப் நடைமுறைப்படுத்தியுள்ளார். ஆபிரிக்க நாடுகளும் விதிவிலக்காக இல்லை. இவ்வாறான நிலையில், இலங்கைக்கு மட்டும் விலக்கு வழங்கப்படுவதற்கான சாத்தியங்கள் இல்லவேயில்லை. ஒரு திருப்திக்காக அநுர தரப்பினர் முயற்சியொன்றை மேற்கொண்டு பார்க்கலாம். அவ்வளவே.

விடயம் என்னவென்றால், அமெரிக்காவைவிடவும், இலங்கை மிகவும் அதிகப்படியான வர்த்தகத்தைக் கொண்டிருப்பதும், வரிச்சலுகைகளை அனுபவிப்பதும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் இருந்துதான். பயங்கரவாதத் தடைச்சட்ட மறுசீரமைப்பு உள்ளிட்ட பல விடயங்களில், தனது பரிந்துரைகளை இலங்கை கருத்திற்கொள்ளாததால் ஐரோப்பிய ஒன்றியம் தற்போது பெருங்கோபத்தில் உள்ளது. இதன் விளைவாக, எதிர்வரும் மாதமளவில் இலங்கைக்கு வழங்கப்படும் 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகையை இரத்துச் செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானிக்கவும் சாத்தியங்கள் தென்படுகின்றன. அவ்வாறானதொரு காரியம் நடந்துவிட்டால், இலங்கைக்கு மேலாக பிணந்தின்னிக் கழுகுகள் வட்டமிட ஆரம்பிக்கும். ஆதலால், அந்நிலை நேராமல் நாட்டையும் மக்களையும் பாதுகாக்க வேண்டியது ஆட்சியாளர்களின் கடமையும் பொறுப்புமாகும்.




# மருந்து விநியோகத்தில் அரசியற் தலையீடு இருக்காது



## சுகாதார அமைச்சர் உறுதி

கொழும்பு, ஏப். 5

எதிர்வரும் காலத்தில் மருந்து வழங்கும் செயற்பாட்டில் எவ்வித அரசியற் தலையீடுகளும் இருக்காது என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சுகாதாரத்துறையில் எழுந்துள்ள மற்றும் ஏற்படக்கூடிய சவால்களைச் சமாளிக்க, அனைத்துத் துறைகளின் ஆதரவையும் பெற்று, ஒரு குழுவாகச் செயற்படுவதே எமது குறிக்கோள். கடந்தகாலங்களில் சுகாதாரத்துறையில் சிக்கல்கள் இருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டது. அந்தவகையில் கடந்தகாலங்களைபோல் அல்லாமல் எதிர்வரும் காலத்தில் மருந்து வழங்கும் செயற்பட்டில் எவ்வித அரசியற் தலையீடுகளும் இருக்காது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# நிதிக்கையாடல் மூவர் கைது!

கொழும்பு, ஏப். 5

நிதிகையாடல் தொடர்பாக ஆயுள்வேத மருந்துகள் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கணினி காசோலைகளில் 27,031,924.15 ரூபா அவர்களால் மோசடி செய்யப்பட்டுள்ளதாக ஆயுள்வேத மருந்துகள் கூட்டுத்தாபன பொது முகாமையாளர் நீதிமன்றத்தில் செய்த முறைப்பாட்டையடுத்தே இந்தக் கைது நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

சந்தேகநபர்கள் இம்மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ச-6)

# 'டை'யில் கலப்படம்; நிலையத்துக்கு 'சீல்'

சிமெந்து, தூசி என்பன கலந்து தயாரிக்கப்பட்ட தலைமுடிச் சாய உற்பத்தி நிலையத்துக்குப் பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் சீல் வைத்துள்ளனர். இந்த நிறுவனம் மட்டக்குளியில் இயங்கி வந்த நிலையில் கைப்பற்றப்பட்ட பொருள்களின் பெறுமதி 28 மில்லியன் என பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-6)

# பாரம்பரிய நகரங்களாக யாழ்ப்பாணம், கண்டி

கொழும்பு, ஏப். 5

கண்டியையும் யாழ்ப்பாணத்தையும் பாரம்பரிய நகரங்களாக அபிவிருத்தி செய்யவுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரியா தெரிவித்துள்ளார்.

பாரிஸில் யுனெஸ்கோவால் ஏற்பாடு செய்யப்பட்ட உலக பாரம்பரிய சொத்துகளைப் பாதுகாப்பது தொடர்பான மகாநாட்டில் உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அநுராதபுரம் ஆயிரம் ஆண்டுகால பழமைவாய்ந்த புராதன பாரம்பரிய தலைநகரம் எனவும் இலங்கை கண்டி, யாழ்ப்பாணம் அநுராதபுரம் என்ற முக்கோண கலாசாரப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது எனவும் இந்த மூன்று நகரங்களையும் கலாசார பாரம்பரிய நகரங்களாக அபிவிருத்திசெய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-6)



# கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களை இறுதிசெய்யவே மோடி வருகை

கொழும்பு, ஏப். 5

இந்தியாவுடன் ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை இறுதிசெய்துகொள்வதே இந்தியப் பிரதமர் மோடி வருகையின் பிரதான நோக்கம் என்று இந்திய வெளியுறவுச்செயலர் விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தங்கள் வெளிப்படைத்தன்மையுடையதாக இருக்க வேண்டுமெனவும் சீன இராணுவ ஆதிக்கத்தைத் தடுக்கும் வகையில் ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது எனவும் எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட பிரசாரங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் இந்திய வெளியுறவுச்செயலர் விக்ரம் மிஸ்ரி இதனை வெளிப்படுத்தியுள்ளார். (ச-6)



நாளை
ஞாயிற்றுக்கிழமை -பங்குனி- 23
06.04.2025
சுபநேரம் : 09.08- 10.38
ராகுகாலம் : 04.38 - 06.08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து ஆளுமைகள் இருவருக்கு தமிழக ஆளுநரின் விருது இன்று!



தமிழருவி த. சிவகுமாரன்


சொல்லருவி சந்திர மௌலீசன் லலீசன்

**இந்தியா, ஏப். 5**

**இந்தியா - தமிழ்நாட்டில் தமிழக ஆளுநரால் வழங்கப்படவுள்ள தமிழ் இலக்கியச் சொற்பொழிவாளர்களுக்கான விருதுக்கு இலங்கையைச் சேர்ந்த மூத்த சொற்பொழிவாளர்கள் இருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.**

வவுனியாத் தமிழ்ச்சங்க அமைப்பாளரும் பேச்சாளருமான தமிழருவி த. சிவகுமாரன் மற்றும் யாழ். தமிழ்ச்சங்கப் பொதுச்செயலாளரும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வருமான சொல்லருவி சந்திர மௌலீசன் லலீசன் ஆகியோரே இந்த விருதுக்கு இலங்கையிலிருந்து தெரிவாகியுள்ளனர். இந்த விருது வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை சென்னை ஆளுநர் மாளிகை ராஜ்பவனில் தமிழக ஆளுநர் ஆர். என். ரவி தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-25,66-110)



# வீதியை மறித்த லொறி; மாணவர்கள் அந்தரிப்பு

### மருதங்கேணியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்.5

வடமராட்சிக் கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் வீதியின் குறுக்காக லொறியொன்று மறித்து தரிக்கப்பட்டதால் அந்த வீதியூடாகச் செல்லும் மாணவர்கள் உட்பட பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

மருதங்கேணியில் புதிதாகக் கட்டப்படும் மாடி வீட்டுக்கு ஓடுகள் இறக்குவதற்காகவே வீதியை முற்றாகமறித்தபடிகுறித்த லொறி நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பாடசாலை செல்லும் மாணவர்கள் உட்பட பிறவாகனங்களும் குறித்த வீதியூடாகச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. வீதியை விட்டு அகலுமாறு லொறிச்சாரதியிடம் கூறியவர்களிடம் லொறிச்சாரதி வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-25,27)

# தனிநபரொருவரால் பறிக்கப்படும் இடுகாடு

### சுழிபுரம் திருவடிநிலை மக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

சுழிபுரம் திருவடிநிலைப் பகுதியில் தனிநபரால் உரிமை கோரப்படும் இடுகாட்டை மீட்டுத்தருமாறு சுழிபுரம் கிழக்குவாழ் சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், நேற்றுமுன்தினம் நடைபெற்ற சங்கானைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காட்டுப்புலம் பாண்டவெட்டைப் பகுதிகளைச் சேர்ந்த 150 முன்னோர்களின் உடலங்கள் இங்கு தாக்கப்பட்டுள்ளன. அத்துடன் றெஜினா என்ற சிறுமி படுகொலை செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் குறித்த பகுதியிலேயே அவரது சடலமும் தாக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கானது இன்னமும் நிறைவடையவில்லை.

காலங்காலமாக உடலங்களைப் புதைத்துவந்த இந்தக் காணியை தனியார் ஒருவர் வாங்கியுள்ளார் என்றும் குறித்த நபர் அதிலுள்ள கல்லறைகளை இடித்துவிட்டு சுற்றுலாமையத்துக்கான கட்டடமொன்றை அமைக்கப்போகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில் பிரதேச செயலர் எமக்கு மூளாய் பகுதியில் 2 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டதாகக் கூறுகிறார். எமக்கு அந்தக் காணியே வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். இதற்கு ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர், இதுகுறித்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ச-125)



### புளியம்பொக்கணை

# நாகதம்பிரான் பொங்கல் உற்சவ வழிபாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.5

வரலாற்றுச் சிறப்புமிகு கிளிநொச்சி கரைச்சிப் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தரப்பொங்கலுக்கான பாரம்பரிய விளக்கு வைத்தல் நிகழ்வு பாரம்பரிய முறைப்படி நேற்று ஆரம்பமாகியுள்ளது.

அதனையொட்டி நேற்று மாலை ஆலய பங்குனி உத்திரப் பொங்கல் விழாவின் பண்டம் எடுத்தல் நிகழ்வுக்கான பிரம்பு வழங்கும் பாரம்பரிய விசேட பூஜை வழிபாடு இடம்பெற்றது. எதிர்வரும் 11 ஆம் திகதி பொங்கல் உற்சவம் இடம்பெறவுள்ளது என்றும் பொங்கலுக்குரிய அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-113)

### சுதந்திரதினக் கொண்டாட்டம்

# யாழ்.மாவட்ட செயலகம் 1,50,392 ரூபா செலவு

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த பெப்ரவரி 4 ஆம் திகதி இடம்பெற்ற சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்காக மொத்தமாக ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 392 ரூபா செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் முன்னெடுக்கப்பட்ட சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்கான செலவினம் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் தகவல் கோரப்பட்டிருந்தது.

இதன்போது மொத்த செலவினத்தின் ஒரு பகுதியாக ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 520 ரூபா செலவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் வடக்குமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, சுகாதாரம் சுதேச மருத்துவ மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள், யாழ். வலயக்கல்வி அலுவலகம் ஆகிய திணைக்களங்கள் தகவலை வழங்குவதற்கு காலத்தை இழுத்தடிப்புச் செய்துவந்த நிலையில் தற்போது தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய யாழ் .மாவட்ட செயலகம் இலங்கையின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்காக மொத்தமாக ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 392 ரூபா செலவிட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-125)



# மாட்டுவண்டியில் மாவைக்கந்தன்!

யாழ்ப்பாணம், ஏப். 5

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழாவைச் சிறப்பிக்கும் முகமாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமான் ஆலயத்திலிருந்து மாட்டுவண்டியில் ஊர்வலமாக எழுந்தருளி மீண்டும் இருப்பிடத்தைச் சென்றடைந்தார். (ச-66)

# இந்தியப் படகுகளை மூழ்கடிப்பதென தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை!

### கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

இந்திய மீனவர்களால் அத்துமீறி உள்நுழைந்து மேற்கொள்ளப்படும் மீன்பிடிகளின்போது கைப்பற்றப்படும் படகுகளை மூழ்கடிப்பது தொடர்பாக இதுவரை எந்தவிதமான தீர்மானங்களும் எடுக்கவில்லை என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். இந்திய இழுவைமடிகளின் வருகையால் எமது கடல்வளம் அழிவடைகின்றது. அழிக்கப்பட்ட கடல் வளங்களை மீளக்கட்டியெழுப்ப வேண்டும். கைப்பற்றப்பட்ட இந்திய இழுவைமடிப்படகுகள் தொடர்பில் திட்டவட்டமான முடிவுகளை இதுவரை எடுக்கவில்லை. இந்த இழுவைமடிப்படகுகளை கரைநகருக்குக் கொண்டுசென்று தரித்துவிடுவது தொடர்பிலேயே ஆலோசிக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான முடிவெடுத்து ஒருவர் உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 5
ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்ட, கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

யாழ்ப்பாணம் அரசடி வீதி, இருபாலை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த கி. கிருபைராஜா (வயது-35) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அவரது சடலம் மீதான மரணவிசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-25,27)

# வேட்பாளர்களுடான கலந்துரையாடல்!

வவுனியா, ஏப்.5
உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ள வவுனியா மாவட்ட வேட்பாளர்களுக்கான தேர்தல் தொடர்பான அறிவுறுத்தல் கலந்துரையாடல் வவுனியா தேர்தல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. வவுனியா மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பி.ஏ.சரத்சந்திர, மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் சி.அமல்ராஜ் ஆகியோர் தேர்தல் தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்கினர். (ச-25,110,18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
19.05.1930

மறைவு:
17.03.2024

அமரர்

## லோகேஸ்வரி செல்லத்தம்பி

**திதி - வளர்பிறை அட்டமி**

ஆண்டொன்று ஆனதோ அதி விரைவாய்
உங்கள் மறைவை இன்னும்
எங்கள் மனம் ஏற்கவில்லை அம்மா!

கனவுகள் கலைந்து போனது
நம் கற்பனைகள் எல்லாம் சிதைந்து போனது
வாழ்வின் அர்த்தம் புரிந்தது

அம்மா என்பது ஒரு மந்திரம்
அது சொல்ல சொல்ல இனிக்கும் தேனாய். என் செய்வோம்
கொடுத்து வைத்தது அவ்வளவு தான் நாங்கள்
என்று எம்மை நாமே தேற்றிடுவோம் !

எல்லோருக்கும் ஒரு
வழிகாட்டியாய் இருந்தீர்கள்
இன்று ஆறுதல் இன்றி நாம் எல்லாரும்
உங்கள் நினைவுகளால் தவிக்கின்றோம்!

மீண்டும் வரமாட்டீர்களா?
என மனம் எண்ணுகிறது
பிறப்பு ஒன்று இருந்தால் இறப்பு என்பது நிச்சயம்
விதி வலியது விளையாடுகிறது

அழியாத காவியமாய்
நீங்கள் அனைவரின் மனத்திலும் என்றென்றும்
இடம் பிடித்துள்ளீர்கள் எங்கள் செல்ல அம்மா !

உங்கள் ஆத்மா இறைவன் திருப்பாதத்தில் இளைப்பாறட்டும் என்றென்றும்
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,**
**மற்றும் பெறாமக்கள்.**

**நாவலடி ஒழுங்கை,**
**மானிப்பாய்.**

(CS/57912) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
27 . 07 . 1948

மறைவு
25 . 03 . 2025

### திருமதி தனலட்சுமி சண்முகநாதன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் உடுவில், கொழும்பு, கனடா (பிரம்ரன்) ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. தனலட்சுமி சண்முகநாதன் அவர்கள் கடந்த 25.03.2025 செவ்வாய்க்கிழமை இறையுள் உறைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா - நாகலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், சண்முகநாதன் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசான்) அவர்களின் மனைவியும், ஸ்ரீதரன், கலைச்செல்வி (கீதா), கலைவாணி (உமா), செந்தில்குமரன், சரவணன் ஆகியோரின் தாயாரும், தட்சாயினி, ஜெயரட்ணம் (ரஞ்சன்), குலேந்திரராஜா, ரகுப்பிரியா ஆகியோரின் மாமியாரும், பரமசாமி அவர்களின் அன்புச் சகோதரியும், பிரசன்னா, பிரியங்கா, பிருத்திகா, குமரன், மாதுமை, பார்கவி, சைந்தவி, ஹரிணி, சேயோன், கல்கி ஆகியோரின் பாசமிகு பேத்தியும், பேரானந்தநாயகி, காலஞ்சென்ற சுந்தரலட்சுமி, மற்றும் தேவாம்பிகை, காலஞ்சென்ற குமாரசாமி, மற்றும் கதிர்வேல் ஆகியோரின் மைத்துனியுமாவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (05-04-2025) சனிக்கிழமை மாலை 5:00 மணி தொடக்கம் 9:00 மணி வரையும், நாளை (06-04-2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணி தொடக்கம் 9:30 மணி வரை Brampton Crematorium & Visitation Centre (30 Bramwin Ct, Brampton, ON L6T 5G2) இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணி தொடக்கம் 11:00 மணிவரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று, தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
கீதா (மகள்) : (647) 853-9891
சரவணன் (மகன்) : (416) 846-8503
ரஞ்சன் (மருமகன்): (416) 522-6130

**குடும்பத்தினர்**

(CS/2889) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
20 . 12 . 1949

மறைவு
03 . 04 . 2025

### குணரட்ணம் குமாரலிங்கம் (குமா)

கோண்டாவில் மேற்கினைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கு வட்டுவினியை வசிப்பிடமாகவும், தற்போது Dr. E.A.Cooray Mw, wellawatte, Colombo - 06 ஐ நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட குணரட்ணம் குமாரலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (03.04.2025) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரட்ணம் - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா -கணேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகாமசுந்தரி அவர்களின் ஆசைத் துணையும், மயூரன் (Aus), நிருஜன் (USA), சிவனுகா, காலஞ்சென்ற விஷ்னுகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆதித்தியா, வைஷ்ணவி, துபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸஷ்வின், ஐரா ஆகியோரின் ஆசைப் பேரனும், சிவலிங்கம், பரமேஷ்வரன், காலஞ்சென்ற இந்திராதேவி, மற்றும் சந்திரலீலா, மகாலிங்கம், மற்றும் வசந்தாதேவி ஆகியோரின் உடன் பிறந்த சகோதரனும், கிளி, ஞானி, காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், விவேகானந்தராஜா, மற்றும் சசி, ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் மைத்துனரும், நீதிரஞ்சன் - நளினி, ராஜேந்ரா - காலஞ்சென்ற ஜெயசூயா, காலஞ்சென்ற குமாரகுலசிங்கம் - மற்றும் தேவநேசம் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (05.04.2025) சனிக்கிழமை காலை 08.30 மணியில் இருந்து பி.ப 1.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் நாளை (06.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 10.30 மணியளவில் ஈமக்கிரியைகள் ஆரம்பமாகி நண்பகல் 12.00 மணிக்கு கல்கிசை பொதுமயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**074 053 0434**

(CR/44750) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிகைக்கால வீதிவியாபாரம் கரவெட்டிப் பிரதேசத்தில் தடை!

யாழ்ப்பாணம், ஏப்.5

கரவெட்டிப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் எதிர்வரும் பண்டிகைக்காலத்தில் பொதுப்போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வீதி வியாபாரங்களை மேற்கொள்ளத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக கரவெட்டிப் பிரதேசசபையின் செயலாளர் கணேசன் கம்ஸநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்தகாலங்களில் நெல்லியடி நகர மையப்பகுதிகளில் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வீதிப்போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் பொருள்கள் வீதிகளில் காட்சிப்படுத்தப்பட்டன. எனினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சில வர்த்தகர்கள் கடந்த பண்டிகைக்காலத்தில் கட்டணம்செலுத்தியமையால் பிரதேசசபையால் அவற்றைத் தடுக்கமுடியாத நிலைமை ஏற்பட்டது. இந்தநிலையில் தற்போது வீதி அதிகாரசபையின் பாராமரிப்பிலுள்ள வீதிகளில் வியாபாரம் செய்வதற்குக் கட்டணங்களை வர்த்தகர்களிடமிருந்து அறவீடுசெய்வதற்கு முன்பதாக பிரதேசசபையின் பரிந்துரையைப் பெறுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட் டுள்ளது. எனவே அனைத்து வர்த்தகர்களும் இதற்கு ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும் கரவெட்டிப் பிரதேசசபையின் செயலாளர் கணேசன் கம்ஸநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ச-33-66)

# அறங்காவலர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம் ஏப். 5

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் கோவில் தர்மகர்த்தா சின்னத்தம்பி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் அறங்காவலர் தின நிகழ்வு கோவில் மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டபதில் செயலர் சு.முரளிதரன் கலந்துகொள்ளவுள்ளார். இதன்போது மாணவர்கள் கௌரவிப்பு இடம்பெறவுள்ளதுடன் கோவில் வெளியீடான 'சுதர்சனம்' நூல் வெளியிடப்படவுள்ளது.

(சு-25.9)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்
ஒரு சதுர அடி - 75 ரூபாய்
நிலம் இழுத்து பதிக்க - 100 ரூபாய்.
077 334 1281
(CS/29629) J-1

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள Service Station ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.
➤ அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு:- 077 556 6605

## திருவள்ளுவர் சிலை நிறுவுதல்

திருமதி.சிற்றம்பலம் அன்னம்மா அறக்கட்டளையின் 10வது ஆண்டு ஆரம்ப விழாவை முன்னிட்டு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட ஓமந்தை கிராம அலுவலர் காரியாலயத்தில் திருவள்ளுவர் சிலையொன்றினை நிறுவுவதற்கு அனுமதி கோரியுள்ளனர். இச் சிலை நிறுவுவது தொடர்பில் பொது மக்களுக்கு ஆட்சேபனை எதுவும் இருப்பின் 05.04.2025 திகதியிலிருந்து 21.04.2025 வரையான திகதிக்குள் செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நெளுக்குளம், வவுனியா என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலின் மூலமோ அல்லது npvstps @yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்து மூலமோ அறிவிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

**செயலாளர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,**
**நெளுக்குளம், வவுனியா**

(CR/44755) J-1

## வீடுகள் வாடகைக்கு

மந்திகை வைத்தியசாலையில் இருந்து 500m தூரத்தில் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள வீடுகள் வாடகைக்கு உண்டு.
தொழில் புரிவோர் விரும்பத்தக்கது.
076 464 4565

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ். மருதடி வீதியில் 3 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு
சுகுமார்:- 076 881 2077
v3sugumar@gmail.com

## பணியாளர் தேவை

யாழ். கே.கே.எஸ் வீதியில் இயங்கும் பிரபல சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு சிகை அலங்கரிப்பு மற்றும் அனைத்து வேலைகளும் தெரிந்த பெண் பணியாளர் தேவை.
071 797 6421




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. வரி எதிரொலி தங்கம் விலையேற்றம்

கொழும்பு, ஏப்.5

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பரஸ்பர வரிகளை கடுமையாக அதிகரித்ததன் காரணமாக உலக சந்தையில் தங்கத்தின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது.**

ட்ரம்ப் அனைத்து இறக்குமதிகளுக்கும் அடிப்படை 10 சதவீத வரியை அறிவித்துள்ளார். குறிப்பாக ஆசிய நாடுகள் மீது மிக அதிக வரிகள் விதிக்கப்பட்டன.

இந்த நிலையில், உலகளாவிய பங்குச்சந்தைகளில் பெரும் வீழ்ச்சி பதிவாகியிருந்ததுடன், தங்கத்தின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

இதன்படி ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 3,118 டொலராக உயர்ந்தது. இது 0.3 வீத அதிகரிப்பு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் வரி அதிகரிப்பைத் தொடர்ந்து உலக நாடுகளில் அமெரிக்க டொலருக்கு நிகரான நாணயங்களின் பெறுமதியும் வீழ்ச்சியடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(ச-இ)

## மரக்கறிகளின் விலை சடுதியாக அதிகரிப்பு



சாவகச்சேரி, ஏப். 5

தென்மராட்சிப் பிரதேசத்தில் சந்தைகளில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திடீரெனப் பெய்துவரும் மழையினால் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனவும் இதனால் அவற்றின் விலை மேலும் அதிகரிக்கும் நிலை ஏற்படுமெனவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ நூறு ரூபாவுக்குள் விற்பனைசெய்யப்பட்ட மரக்கறி வகைகள் தற்போது 500 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றன.

(ச-25,-9)

போட்டோக் கொப்பி
இருபக்கம் 3/-
(1st Team Paper 2025)
கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம் 0760 53 83 29

## வருடாந்த பொதுச்சபைக் கூட்டம்

யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் 2025.04.20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் சங்கத் தலைவர் திருமதி சுலபாமதி கணேசமூர்த்தி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளதால் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**யோ.பங்கயச்செல்வி**
**கௌரவ செயலாளர்**

2025.04.03



# உணவுத் தயாரிப்பில் சுகாதாரச்சீர்கேடு!

## உணவுப்பொருள்கள் அழிப்பு

மன்னார், ஏப்.5

மன்னார் மூர்வீதிப் பகுதியில் பாழடைந்த வீடொன்றில் மனித பாவனைக்குதவாத வகையில் சுகாதாரச் சீர்கேடான வகையில் தயாரிக்கப்பட்ட உணவுகள் சுகாதாரப் பிரிவினரால் மீட்கப்பட்டு நீதி மன்ற உத்தரவுடன் அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை மன்னார் நகர சுகாதார மருத்துவ அதிகாரி ரூபன் லெம்பேட் தலைமையிலான குழுவினர் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டபோது இந்தச் செயல் கண்டறியப்பட்டது. குறித்த இடத்தில் தயாரிக்கப்படுகின்ற உணவுப்பொருள்கள் மன்னார் பகுதியில் உள்ள பல்வேறு உணவகங்களுக்கு விற்பனைக்காக வழங்கப்பட்டமை விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-33-56)


# செயற்பட்டு மகிழ்வோம்

சாவகச்சேரி, ஏப். 5

நாவற்குழி கோவிலாக் கண்டி செல்வா முன்பள்ளி மற்றும் காந்தி முன்பள்ளிச் சிறார்க ளின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு, நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கோவிலாக் கண்டிக் கிருஷ்ணன் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது. செல்வா முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் த. தார்மீகன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

(ச-25,9)

## முதலாம் ஆண்டுத் திவச அழைப்பு



கடந்த 18.03.2024 திங்கட்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர் தம்பு தம்பிராசா**

அவர்களின் 'முதலாம் ஆண்டு திவசம் இன்று (05.04.2025) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

**குடும்பத்தினர்**
**077 024 8233**

(CR/44757) J-1

# 'க்ளீன் சிறீலங்கா'வினூடாக இராணுவமயமாக்கல்!

## நிரோஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

'க்ளீன் சிறீலங்கா' செயற்றிட்டத்தினூடாக முலாம் பூசி மக்களை ஏமாற்றி இராணுவமயமாக்கலை படிப்படியாக வடக்கில் மேற்கொள்ள அநுர அரசாங்கம் காய்நகர்த்துகின்றது என்று வலி. கிழக்கு முன்னாள் பிரதேசசபைத் தவிசாளர் நிரோஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையான சுத்தப்படுத்தல் பணிகளை மேற்கொள்ளவேண்டுமாயின் கட்சித் தொண்டர்களை அல்லது ஆளுநர்மூலம் மாநகரசபை ஊழியர்களைப் பயன்படுத்தியிருக்கலாம். மாறாக இராணுவத்தினர் பயன்படுத்தப்படுகின்றனர்.

தமிழ் மக்கள் தமக்கு நல்ல தீர்வுகிட்டும் என எண்ணி தேசிய மக்கள் சக்திக்கு வாக்கை வழங்கியிருந்தார்கள் . ஆனால் காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் அநுரகுமார முரணான கருத்தைப் பதிவுசெய்துள்ளார். அரசியற்கைதிகள் தொடர்பில் தீர்வு வழங்கப்படவில்லை . தற்பொழுது பட்டலந்த அறிக்கையைத் தூசு தட்டுகின்ற அரசு லலித், குகனுக்கு ஏன் நீதியைக் கேட்கவில்லை. எனவே நாம் தாயகம் ,தேசியம்,சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டில்தெளிவாக முன்னகரவேண்டும் -என்றார். (ச-25,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் உற்பத்திப்பொருள்கள் காட்சிப்படுத்தலும் விற்பனையும்



சாவகச்சேரி, ஏப் 5
தென்மராட்சிப் பிரதேச சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப்பொருள்கள் காட்சிப்படுத்தலும் விற்பனைச் சந்தையும் பிரதேச செயலக முன்றலில் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் 20 முயற்சியாளர்கள் பங்குபற்றி தமது உற்பத்திப்பொருள்களை விற்பனைசெய்து பயனடைந்தனர். (25,9)



# இராணுவத்தால் வீடு கையளிப்பு


கொடிகாமம், ஏப் 5
யாழ். கொடிகாமம் தவசிக்குளம் பகுதியில் இலங்கை இராணுவத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட வீடு, குடும்பமொன்றுக்கு அண்மையில் இலங்கை இராணுவத்தளபதியால் கையளிக்கப்பட்டது.
நிகழ்வில் இலங்கை இராணுவத்தளபதி, யாழ். பாதுகாப்புப்படைக் கட்டளைத் தளபதி, 52ஆவது காலாட்படையின் சேனாதிபதி, 523ஆவது காலாட்படைப்பிரிவின் படைத்தளபதி, 7ஆவது விஜயபாகு படைப்பிரிவின் படைத்தளபதி, இமேஜின் கம்பெஷன் இன்ரர்நெஷ்னல் லிமிட்டட் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் உறுப்பினர்கள், கிராம சேவையாளர், அருட்தந்தை, அரச உத்தியோகத்தர்கள், இராணுவ அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-41-27)

# தேசியமட்ட பளுதூக்கல் வேலணை மாணவி சாதனை





வேலணை, ஏப் 5
இலங்கை பளுதூக்கல் கூட்டமைப்பால் நடத்தப்பட்ட தேசியமட்ட பளுதூக்கல் போட்டியில் வேலணைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் சாணுஜா இரண்டாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.
சாதனை மாணவியை பிரதேசசெயலாளர்கடந்த செவ்வாய்க்கிழமை பாராட்டி மதிப்பளித்தார். (ச-25,9)



# கலாசாலையில் இப்தார் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப் 5
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இஸ்லாமிய மாணவர் மன்றம் முன்னெடுத்த இப்தார் நிகழ்வு கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.
நிகழ்வில் மௌலவி எம். வை. அப்துஸ்ஸத்தார் (ஹாஷிமி) அதிதிப் பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். கலாசாலையின் விசேட கல்வி ஆசிரிய மாணவி எஸ். எப். நுஸ்லா வரவேற்புரை ஆற்றினார். தொடர்ந்து இப்தார் விருந்துபசாரமும் நடைபெற்றது. (ச-41-66)



# மன்னாரில் இப்தார் நிகழ்வு


மன்னார், ஏப் 5
தமிழ், முஸ்லிம் மீனவச் சமூகங்களுக்கிடையே மத ஒற்றுமையை மேம்படுத்தும் வகையில் நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு முசலிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொண்டச்சிப் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது.
மன்னார் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில், முசலிப் பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் மற்றும் தமிழ் மீனவர்கள் பங்கேற்றனர். (ச-41-56)

# பருத்தித்துறையில் காசநோய் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஏப் 5
காசநோய் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு அண்மையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நடைபெற்றது.
நிகழ்வில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் மருத்துவக் கலாநிதி மருத்துவர் சத்தியமூர்த்தி, மருத்துவக் கலாநிதி மருத்துவர் பிரசாத், தொற்றுநோயியல் பிரிவினர், மருத்துவர்கள், சுகாதாரத் துறைப் பணியாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-22,100)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வந்தார்...

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் இடம்பெற்ற பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர், அங்கிருந்து மூன்று நாள்கள் பயணமாகவே இலங்கைக்கு வந்துள்ளார். பிரதமர் மோடியின் வருகையைத் தொடர்ந்து, விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்மித்த பகுதிகளில் நேற்று இரவு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

இன்று காலை 9 மணிக்கு சுதந்திர சதுக்கத்தில் பிரதமர் மோடிக்கான வரவேற்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் மோடிக்கிடையில் இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன. பேச்சுவார்த்தைகளின் நிறைவில் இருவராலும் கூட்டுஊடக அறிவித்தலும் வெளியிடப்படவுள்ளது. வலுசக்தி, டிஜிட்டல் மயமாக்கல், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இன்றையதினம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும் என்றும் கருதப்படுகின்றது.

இந்தப்பயணத்தின்போது, சம்பூர் சூரிய மின் உற்பத்தித் திட்டம், வெப்பநிலை மற்றும் ஈரப்பதனைக் கட்டுப்படுத்தக்கூடிய 5 ஆயிரம் மெட்ரிக் தொன் தம்புள்ள களஞ்சிய வளாகத்தின் நிர்மாணம், 5 ஆயிரம் மதத் தலங்களின் கூரைகளில் சூரிய மின்கலங்களை நிறுவும் திட்டம் என்பன இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளன. (அ-ம-இ)




# மரியசேவியர் அடிகளாரின் நினைவுநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.5

திருமறைக்கலாமன்றத்தின் ஸ்தாபகர் கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் 4 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசியர் அ.சண்முகதாஸ் தலைமையில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூதுக் கலையகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை முன்னாள் தலைவரும், ஓய்வுநிலைப் பேராசிரியருமான கலாநிதி திருமதி ஏ.என்.கிருஷ்ணவேணி 'அழகியல்: ஓர் ஆன்மீக நோக்குநிலை' எனும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்தினார். (ச-25,66)

## புத்தாண்டில்...

பனை நிலையங்களை மூடுவது என்று மதுவரித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

சுற்றுலாத்துறையின் அனுமதிபெற்ற ஹோட்டல்களில் தங்கியுள்ள வெளிநாட்டு சுற்றுலாவிகளுக்கு மட்டும், எதிர்வரும்13ஆம்மற்றும்14ஆம்திகதிகளில் மதுபானத்தை விற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-சீ)

## பிரதிப்...

விக்கு நியமிக்க தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர, கோத்தாபய ஆட்சியில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டு, கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டார்.

இந்தநிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், அவர் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டார். இதன் தொடர்ச்சியாகவே, தற்போது அவரை பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-இ)

## ஏழு...

களின்விலைகள்குறைக்கப்பட்டுள்ளன. பெரிய வெங்காயம், பொதிசெய்யப்பட்ட மீன், சிவப்புச் சீனி, பருப்பு, நாட்டு அரிசி, கோதுமை மா மற்றும் சிவப்புப் பச்சை அரிசி ஆகியவற்றின் விலைகளே குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பெரிய வெங்காயம் ஒரு கிலோகிராமின் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 140 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பொதி செய்யப்பட்ட மீன் 425 கிராமின் விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 395 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு சீனி ஒரு கிலோகிராமின் விலை 22 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலையாக 255 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு பருப்பு ஒரு கிலோகிராமின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலையாக 265 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நாட்டு அரிசி ஒரு கிலோகிராமின் விலை 7 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலையாக 213 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கோதுமை மா ஒரு கிலோகிராமின் விலை 7 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலையாக 155 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சிவப்பு பச்சை அரிசியின் விலை 3 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலையாக 217 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## ஹெரோய்னுடன்...

போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையிலேயே, குருநகர் பகுதியில் வைத்து மேற்படி மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26-27)

## வடக்கில்...

ளன. சட்டமா அதிபர் திணைக்களத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் போது இறுதி முடிவு எடுக்கப்படாத வழக்குகள் மீதான விசாரணைகள் கடந்த திங்கட்கிழமையும், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமையும்உயர்நீதிமன்றத்தில் இடம்பெற்றன. முறைப்பாட்டாளர்களின் சமர்ப்பணங்களையும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த உயர்நீதிமன்றம், அனைத்து மனுக்களையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

### முரணான தீர்ப்பு

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் சில மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அந்த மனுக்கள் மீதான தீர்ப்பும் நேற்று வழங்கப்பட்டது. ஆனால், 37 வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளுமாறு தேர்தல்கள் திணைக்களத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. அதாவது, கிட்டத்தட்ட ஒரே விடயத்தில் உயர் நீதிமன்றம் ஒருவாறும், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒருவாறும் தீர்ப்பு வழங்கியுள்ளன. இதையடுத்து, மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புத் தொடர்பில் மேலதிக சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## செம்மணி...

எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான நிதிமூலம் இன்னமும் விடுவிக்கப்படவில்லைஎன்றவிடயம்நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து வழக்கு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (அ-ம-26)

## தனியார்...

தினர், அதற்குள் நின்ற வாகை மரத்தை வெட்டியுள்ளனர். இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் அனுமதி பெறாமல் மரங்களை வெட்டியதை உறுதிப்படுத்திய ஊர் மக்கள், அது தொடர்பில் வனவள பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளுக்குத்தகவல்வழங்கியுள்ளனர். இதன்போது, 'வாகை மரங்களை காணியின் உரிமையாளர் வெட்டலாம். வீதியில் எடுத்துச் செல்லவே அனுமதி அவசியம்' என்ற பதில் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து, முறையான அனுமதி பெற்றே வாகைமரத்தை வெட்டினார்கள் என்ற அனுமதிக் கடிதமொன்றை வழங்குமாறு, காணியின் உரிமைத் தரப்பிடம் இராணுவத்தினர் குடைச்சல் கொடுத்து வருவதாகவும் தெரியவருகின்றது. (அ-ம-125)

## ஜூன்...

பத்திரங்களில் முதலீடு செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு 1.8 பில்லியன் ரூபாவுக்கும் அதிக தொகையை இழப்பு ஏற்படுத்திய குற்றச்சாட்டில், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உட்பட நால்வருக்கு எதிராக ஜூன் மாதம் 26ஆம் திகதி விசாரணை நடத்தப்படவுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, சந்தேகநபர்களுக்கு எதிரான விசாரணைகளை ஆரம்பிப்பது தொடர்பான விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கின் மற்றுமொரு சந்தேகநபரான சந்திரசிறி ஜயசிங்க காலமாகிவிட்ட நிலையில், அவருடைய இறப்பை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளன. (அ-ம-இ)

## அரச...

வர்கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய எதிர்வரும் 8ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கிராம அலுவலர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைதான சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ம-26)

## மோடியின்...

குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட அவர்கள், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். எனினும், அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த நிலையில், வழக்குத் தொடுநர்களான கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினர், 'கொள்கை ரீதியான இலங்கை இந்திய நல்லெண்ண அடிப்படையில் விடுவியுங்கள்' அந்த மீனவர்களை விடுவிக்குமாறு முன்வைத்த சமர்ப்பணங்களைத் தொடர்ந்தே அவர்கள் அனைவரும் ஊர்காவற்றுறை நீதிபதி நளினி சுபாஸ்கரனால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும், மிரிஹான தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டு, அங்கிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்படவுள்ளனர். மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருள்களும் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், உரிய ஆதாரங்களைக் காண்பித்து அவற்றைப் பொறுப்பேற்றுக்கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மோடியை மகிழ்விக்க இந்திய மீனவர்களை விடுவித்த அரசாங்கம், தனது சொந்த நாட்டு மீனவர்களின் நலனில் அக்கறை இல்லாமல் இருப்பது குறித்து, வடபகுதி மீனவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ-ம-20-125-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEC

யாழ் நகர், பெருமாள் கோவில் அருகாமை

**A/L 2027**

கலை&வர்த்தகம் புதிய பிரிவு

ஆரம்பம் :- 06.04.2025 ஞாயிறு
காலை 09 மணி

அனுமதியை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

தொடர்புகளுக்கு : 0765350999


# கும்பாபிஷேகம்

கிளிநொச்சி, ஏப். 5

கிளிநொச்சி பதியுறை அருள்மிகு ஸ்ரீ காளிகாம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு கர்மாரம்பம் இடம்பெறவுள்ளது. மறுநாள் புதன்கிழமை காலை 9.20 மணிமுதல் மாலை 5 மணிவரை எண்ணெய்க்காப்பு இடம்பெறவுள்ளது.

பிரதம குரு சிவஸ்ரீ கதிர் இராமலிங்க ஐயாவின் ஆசியுடன் தென்இந்திய பயிற்சிக் குருமணி சிவாகமரத்தினம் சிவஸ்ரீ இராம.சிறீரங்கக்குருக்கள் தலைமையில் கும்பாபிஷேக கிரியைகள் இடம்பெறவுள்ளன. (ச-25, 159)


## காணி விற்பனைக்கு

**உரும்பிராய் வடக்கில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு**

* இரண்டு பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 1 பரப்பின் விலை (1200000) பன்னிரண்டு இலட்சம் ரூபாய்.
* சரஸ்வதி சனசமூக நிலையம் அருகாமை குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி.
* செம்மண் நண்ணீர் ஊற்று நிலப்பரப்பு 20 அடி பாதை.
* உரும்பிராய் இந்துக் கல்லூரி 1 KM தூரம்
* உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவில் 1 1/2 KM தூரம்.
* தரகர் தேவையில்லை.

தொடர்பு: 076 990 3039
077 468 3354



## காணி விற்பனைக்குண்டு

கோப்பாய் - உரும்பிராய் பிரதான வீதியில் 3 பரப்புக்காணி விற்பனைக்கு உள்ளது

தொடர்பு:
070 665 9778

(CS 2895) A


# தமிழரசின் வேட்பாளர் அறிமுகம்!

யாழ்ப்பாணம், ஏப். 5

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் குறித்த நிகழ்வு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். (ம20,26)


## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தில் பணி புரிவதற்கு கணினி அறிவுள்ள ரைப்பிங் செய்யக் கூடிய பெண் ஊழியர்கள் தேவை. மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்.

**Selva Telecom (Pvt) Ltd.**
122A, Temple Road, Jaffna.
(பொஸ்கோ பாடசாலை சந்தி)
0777 28 60 50

(CS 2894) A



## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் கிழக்கில் 36 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு**

* 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இருவழி பாதையுடன்
* 1 பரப்பின் விலை
* பிரதான வீதி முகப்புடன் பதினேழு லட்சம் ரூபா (17,000,00)
* இரண்டாம் காணி பதினைந்து லட்சம் ரூபா (15,000,00)
* பின் பகுதி காணி எட்டு லட்சம் ரூபா (8,000,00)
* நெல்லியடி பஸ்நிலையம் 2 1/2 KM, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 KM, மந்திகை ஆஸ்பத்திரி 1 KM பருத்தித்துறை வீதி 600M, மாலு சந்தி 1 KM தூரம்
* தம்பசெட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 KM தூரம், மாலுசந்தி பிள்ளையார் கோயில் 1 KM தூரம்
* குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை நன்னீர் ஊற்று
* தரகர் தேவையில்லை


(பார்வையிடும் நேரம் காலை 8.00 - மாலை 6.00 வரை)

தொடர்பு: 076 860 2770
076 987 8617
076 935 3971



## விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட **Greaves MK12, MK 20 நீர் இறைக்கும் இயந்திரம் (Water Pump)** இப்பொழுது எம்மிடம். அத்துடன் இலங்கையில் முதன் முதலாக அறிமுகப்படுத்துகின்றோம். ஒரே என்ஜினிற்கு விரும்பிய எரிபொருளை நீங்களே தெரிவு செய்யலாம். (மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல்)



"நாங்கள் உங்களோடு"

ஆர்க் .என். கம்பனி

* 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
* A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
* A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020



Hotline: 071 535 7799 / 071 535 7803


## மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 10 . 1949



மறைவு
03 . 04 . 2025

### சண்முகம் நவரத்தினம்

யாழ் வசாவிளான் தெற்கு வசாவிளான் கரம்பக்கடவையை பிறப்பிடமாகவும், ஆவரங்கால் சந்தை வீதியை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் நவரத்தினம் அவர்கள் நேற்றுமுன்தினம் (03.04.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கமணி மற்றும் தவராணி அவர்களின் அன்பு கணவரும், நாகலிங்கம் செல்லம்மா மற்றும் சிவகுரு கனகம்மா அவர்களின் மருமகனும், சுதாகரன் (கனடா), மதிவதனி (இலண்டன்), காலஞ்சென்ற ஜனார்த்தனன், அனுஜன் (இலண்டன்) அவர்களின் பாசமிகு தந்தையும், நடராசா(இலண்டன்) அவர்களின் மாமனாரும், மினோசனா, சர்மியா ஆகியோரின், வேதா, அக்சித், அட்சரா, ஆதிரன், இஷான், தியான், பார்கவி, பவிஷன், பார்நிலா ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற நாகரத்தினம், இராசநாயகம் (கனடா) அவர்களின் சகோதரரும், வரதநாயகி, சாந்தி தவமணிதேவி, கந்தலிங்கம், சிவபாகன், அம்பிகைபாகன், சிவபாதசுந்தரம், மனோராணி, பவளராணி, விமலராணி, தவக்குகனின் ஆகியோரின் மைத்துனரும், கிருசாந்தி, பிரியந்தி, காயத்திரி, லாவண்யா, சாருயா அவர்களின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சுதாகரன் - மகன் (கனடா) - 001 438 622 956
மதிவதனி - மகள் (இலண்டன்) - +44 739 879 7208
அனுஜன் - மகன் (இலண்டன்)
+44 740 512 3293 , 076 216 6200

தகவல் :
குடும்பத்தினர்

(CR/44752) J-1


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

* பலாலி வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
* 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது
* உரும்பிராய் பெற்றோல் செற் முன் வீதியில் உள்ளது
* பயன் தரும் தென்னைகள் உள்ளன
* நல்ல சுற்று சூழல் குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
* நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
* ஒரு பரப்பின் விலை 64 லட்சம்
* தரகர் தேவையில்லை
* பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு: ஜெயம்

077 814 7389
077 986 5457

(CS/2893) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.